# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**


**ஆணை நாள்: 04.03.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

……………

**வழக்கு எண். SA13828/F/2023**

திரு. பூ.கமல்தாஸ் … மனுதாரர்

/ எதிர் /

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
காணை
விழுப்புரம் மாவட்டம் - 605 301. … பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **16.05.2023.** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **19.06.2023** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **28.07.2023** |

******

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் ஆணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய தின விசாரணையில் மனுதாரர் திரு.பூ.கமல்தாஸ் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி. K. கலா, பொதுத் தகவல் அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், காணை, விழுப்புரம் மாவட்டம் மாவட்டம். அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 16.05.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், விழுப்புரம் மாவட்டம் காணை வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் கடையம் ஊராட்சி தொடர்பாக 2021 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையில் பராமரிக்கப்படும் அனைத்து ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளை பார்வையிட்டு நகல் எடுக்க அனுமதி வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காத காரணத்தால், மனுதாரர் 19.06.2023 நாளிட்ட பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால் மனுதாரர் 28.07.2023 நாளிட்ட பிரிவு 19(3)இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.03.2025 அன்று முற்பகல் நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஏற்கெனவே 20.07.2023 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், மனுதாரர் 19.12.2024 அன்று கடையம் ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு நேரில் சென்று ஆவணங்களை பார்வையிட்டு தேவையான தகவல்களை மனநிறைவுடன் பெற்றுக் கொண்டதாகவும், இம்மனு மீது மேல் நடவடிக்கை தேவையில்லை எனத் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மனுதாரரின் மனநிறைவு கடிதத்தின் அடிப்படையில், இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA13828/F/2023</u>**

**பெறுநர்**

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
காணை
விழுப்புரம் மாவட்டம் - 605 301.

**<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>**

திரு. பூ.கமல்தாஸ், த/பெ. பூங்காவனம்
இருளர் குடியிருப்பு, கடையம் கிராமம்,
நல்லா பாளையம் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம்
விழுப்புரம் மாவட்டம் - 605 701

Copy to: Judgement File/ Spare.
JE/PA 05.03.2025